செய்தி வெளியீடு எண் : 1772 நாள் : 10.10.2022

**மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில், இன்று (10.10.2022) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

---

பொதுப்பணித்துறையின் பல்வேறு திட்டங்கள், அறிவிப்புகள், ஆகியவற்றினை செயல்படுத்திய விபரம், நிலுவையிலுள்ள திட்டங்களை விரைவுப்படுத்த வேண்டியது தொடர்பாக, இன்று (10.10.2022) தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை, 5வது தளத்தில் உள்ள கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டம் நடைப்பெற்றது.

காலை 10.30 மணிக்கு துவங்கிய ஆய்வுக் கூட்டத்தில், கோயம்புத்தூர் மண்டலம் மற்றும் மதுரை மண்டலம் ஆகிய இரண்டு மண்டலங்களின் செயல்பாடுகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்தினை தொடங்கி வைத்து உரையாற்றியபோது,**

பொதுப்பணித்துறையில் இதுவரை மருத்துவ பணிகளுக்கான பிரிவு மற்றும் இதர பணிகளுக்கான பிரிவுகள் என செயல்பட்ட நிலை மாற்றப்பட்டு, பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு செயற்பொறியாளர் பணிபுரியும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கோட்டங்களுக்கிடையே பணிப்பகிர்வு மற்றும் பணிப்பளு, இதனால் சீராக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டி காட்டினார்கள்.

செயற்பொறியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நேரடி தொடர்பில் இருந்து, இணக்கமுடன் செயல்பட்டு துறைப்பணிகள் தடையின்றி நடைபெற பாடுபட வேண்டும் என்றும், பருவமழை தொடங்கி இருப்பதால், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனை கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்துத்துறை கட்டடங்களையும் ஆய்வு செய்து, மேற்கூரையில் தண்ணீர் தேங்கா வண்ணம் சுத்தப்படுத்துதல், கட்டட வளாகங்களில் தேங்கும் மழைநீரை உடனடியாக வெளியேற்ற முன்னேற்பாடுகள் செய்து வடிகால்களை சீர்செய்தல், வலுவிழந்த மரங்கள், கிளைகளை வெட்டி அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இடிக்கப்பட வேண்டிய பழைய பள்ளி கட்டடங்களை தாமதமின்றி உடனடியாக இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். பருவமழை தொடங்கும்

நிலையில் உள்ளதால், பேரிடர் தொடர்பான விபரங்களை பெற்று உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க மண்டல கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போது, நடைபெற்று வரும் 11 அரசு மருத்துவக் கல்லூரி கட்டட பணிகளை விரைந்து முடிக்கப்பட வேண்டும். ஜெய்கா (JICA) நிதி உதவியின் மூலம் நடைபெற்று வரும் 7 அரசு மருத்துவமனை கட்டடப் பணிகளை வரும் மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். 69 ITI கட்டட பணிகளை தொய்வின்றி ஜனவரி 2023 இறுதிக்குள் முடித்து ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் கட்டட பணிகளில் முறையாக முழு அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்ட பணிகளுக்கு கட்டட வரைபடம் ஒப்புதல், சுற்றுச்சூழல் அனுமதி பெற உடனடியாக விண்ணப்பிக்கப்பட வேண்டும். இவ்வனுமதி பெற்றபின்னரே பணிகள் துவக்கப்பட வேண்டும். ஆய்வு மாளிகை, சுற்றுலா மாளிகைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். புதிய கட்டுமானங்களில் ஓய்வறை வசதிகள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொதுக் கட்டடங்களில் பராமரிப்பு, சுகாதார பணியாளர்களுக்குப் போதிய இருப்பிட வசதி ஏற்படுத்திதர வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

நபார்டு நிதி உதவி மூலம் நடைபெற்று வரும் பள்ளி கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மாதம் ஒருமுறையாவது, மண்டல அளவில் பணி ஆய்வுக் கூட்டம் நடத்தி, கூட்ட நடவடிக்கை குறிப்புகளை முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி, கட்டடப் பணிகள் தொய்வின்றி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 110விதியின்கீழான அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர்கள் அறிவிப்புகளை செயல்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இடத்தேர்வு, மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தங்கள் இறுதி செய்து பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

ஒப்பந்ததாரர் பதிவு, புதுப்பித்தல், மறு வகுப்பீடு செய்தல் ஆகியவற்றில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். Curing முறையாக முழுமையாக நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மருத்துவமனைகளில், பராமரிப்பு பணிகளின் ஆய்வுக்காக, கல்லூரி முதல்வர்(Dean)ஆல் மேற்கொள்ளப்படும் வாராந்திர ஆய்வில் (Weekly Rounds) உதவிப் பொறியாளர்கள் கலந்துக் கொள்ள வேண்டும். உதவிச்

செயற்பொறியாளர்கள், 15 நாட்களுக்கு ஒருமுறையும், செயற்பொறியாளர்கள் மாதம் ஒருமுறையும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

அரசு மற்றும் தனியார் நிறுவன கட்டடங்களின் உறுதித் தன்மை (Structural Stability) குறித்து கண்காணிப்புப் பொறியாளர்களால் வழங்கப்படும் சான்றிதழ்களின் மாதாந்திர அறிக்கை, மண்டல தலைமைப் பொறியாளர்களால் பெறப்பட்டு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம், ஜல்லிக்கட்டு பணித்தளம், மதுரை மருத்துவமனை கட்டுமான பணி (Modular Operation Theatre), திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தேசிய கூட்டுறவு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மதுரை சுற்றுலா மாளிகை, அரசு பள்ளிகளில் நபார்டு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர், கழிவறை அமைத்தல் பணி, அரசு ITI பணிகள், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், காரைக்குடி புதிய சட்டக்கல்லூரி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி கட்டும் பணி, கி.இராஜநாராயணன் நினைவு மண்டப பணி, தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணி, தூத்துக்குடி உயர்சிறப்பு மருத்துவமனை கட்டுமான பணி, கன்னியாகுமரி பயணியர் படகு இறங்குதளம் விரிவாக்கப்பணி, எட்டையபுரம் பாரதியார் மணிமண்டபத்தில் போட்டி தேர்வர்களுக்கான அறை அமைக்கும் பணி, எல்காட் பணி, தென்காசி அரசு சுற்றுலா மாளிகை, கோவை அரசு மருத்துவமனை, உதகமண்டல அரசு மருத்துவக்கல்லூரி கட்டுமான பணி, உதகமண்டல நீதிமன்ற கட்டட வளாக தடுப்பு சுவர் மற்றும் சாலை அமைத்தல், ஈரோடு பன்னோக்கு அரசு மருத்துவமனை, நாமக்கல் அரசு சட்டக்கல்லூரி, தலைவாசல் கால்நடை ஆராய்ச்சி நிலையம், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி, சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவமனை– செவிலியர் பள்ளி விடுதி கட்டடம் போன்ற பணிகளை ஆய்வு மேற்கொண்டார்கள்.

காலை 10.30 மணிக்கு தொடங்கிய ஆய்வுக் கூட்டம் மதியம் 2.00 மணிக்கு முடிவடைந்தது. திருச்சி மண்டலம் மற்றும் சென்னை மண்டலம் அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் மாலை 4.00 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

ஆய்வுக் கூட்டம் தொடங்கும் முன்பாக களப்பொறியாளர்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பொறியாளர்கள் பொறுப்பில் நடைபெறும் **"கட்டுமானம் பணிகளில் கண்காணிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான தரக்கட்டுப்பாட்டு அளவு கோல்கள் அனைத்தும் அடங்கிய கையேடு"** தயார் செய்யப்பட்டு

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இக்கையேடு வெளியிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது, நம் பாசத்திற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், **"எல்லோர்க்கும் எல்லாம்"** எனும் தத்துவம் நடைமுறைக்கும் வர வேண்டும் என்கிறார்கள். அதற்காக சமூக, சமத்துவ, சமதர்ம, சமூக நீதிக் கோட்பாடுகளை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசை தமிழகத்தில் உருவாக்கி, இந்தியா முழுவதிலும் அக்கோட்பாடுகளைப் பரவச் செய்துள்ளார்கள். அவர்தம் கொள்கை வழியில் தமிழகப் பொதுப்பணித்துறையின் பணிகள் அனைத்தும் உறுதியாகவும், நேர்த்தியாகவும், நிறைவேற்றப்படுவதுடன், தரமாகவும் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக மூன்று தரக்கட்டுப்பாடு கோட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இக்கையேட்டில் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் மற்றும் தரம் குறித்த அனைத்துக் குறிப்புரைகளையும், கவனத்தில் கொண்டு களத்தில் நடைபெறும் பணிகளில் அவற்றை நடைமுறைப்படுத்தி கட்டடப் பணிகள் அனைத்தும் முறையாகவும், சிறப்பாகவும் நடைபெற அலுவலர்கள் அனைவரும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தரக்கட்டுப்பாடுகள் தொடர்பான கையேடு வெளியிடப்பட்டப் பிறகு திருச்சி மற்றும் சென்னை மண்டலங்களின் ஆய்வு தொடர்ந்து நடைபெற்றது

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை, அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை, முதன்மை தலைமைப் பொறியாளர், திரு. இரா.விஸ்வநாத், மண்டல தலைமைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in